<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 278/2013 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்னதம்பி | நாள் | 16.12.2024 |
| தகப்பனார் பெயர் | முத்தப்பன் | | |

<u>**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**</u>

1) 2, 3 வாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், இருவரும் என் மூத்த சகோதரிகள் ஆவர். மேற்படி இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்ாறல், ஆகிவிட்டது. தற்போது அவர்கள் எங்கு வசிக்கின்றனர் என்றால், கொளத்தூரில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு திருமணம் ஆகி எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால், சுமார் 35 முதல் 40 வருடங்கள் இருக்கும். கடந்த 40 வருடங்களாக 2, 3 வாதிகள் கொளத்தூரில் தான் அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகின்றனர் என்றால், சரிதான்.

2) தற்போது இவ்வழக்கில் 2, 3 வாதிகள் வீரக்கல் கிராமத்தில் வசிப்பதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால் அவர்கள் அவ்வப்போது தாவா சொத்திற்கு விவசாயம் செய்ய வந்து செல்வார்கள். தாவா சொத்து எங்களுக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எவ்வாறு எங்களுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால், அது எங்கள் பாட்டனார் சொத்து ஆகும். என் பாட்டனாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்ட சொத்து என்றால், அவருக்கு கிரயப்படி பாத்தியப்பட்டது. எப்போது என் பாட்டனார் தாவா சொத்தை கிரயம் பெற்றார் என்றால், 1958 ம் வருடத்தில் கிரயம் பெற்றார்.

3) என் பாட்டனார் காலத்திற்கு பிறகு மேற்படி சொத்து யார் அனுபவித்து வந்தனர் என்றால், என் பாட்டனார் அவரது காலத்திலேயே என் தந்தை முத்தப்பனுக்கும், என் சித்தப்பா கருப்பண்ணனுக்கும் பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார். மேற்படி பாகபிரிவினை பத்திரம் எதையேனும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், என் பாட்டனார் வாய்மொழியாகத்தான் பாகபிரிவினை செய்து கொடுத்தார்.

4) என் தந்தை முத்தப்பன் என் பெயரிலோ, என் சகோதரிகள் பெயரிலோ தாவா சொத்து குறித்து ஏதேனும் ஏற்பாடுகள் செய்து வைத்துள்ளாரா என்றால், இல்லை. வாரிசுரிமைப்படி நாங்கள் அனுபவித்து வருகிறோம். தற்போது எந்தெந்த சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ச.எண்.209/3ல் உள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ச.எண்.209/3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். ச.எண்.209/4 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எங்களுக்கு பாத்தியப்பட்டது.

5) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் ச.எண்.209/4ல் வீடு உள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில், என்ன வீடு உள்ளது என்றால், ஓலை வீடு உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு ச.எண்.209/4ல் தற்போது எந்த வீடும் இல்லை என்றாலும், சரியல்ல. தாவா சொத்து விவரத்திலும் அவ்வாறு வீடு எதையும் நான் காண்பிக்கவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். தற்போது நான் வசித்து வரும் வீடு எங்கு அமைந்துள்ளது என்றால், வீரக்கல் கிராமம், அத்தியப்பன் காட்டுவளவில் உள்ளது. நான் குடியிருக்கும் வீடு விவசாயம் செய்யும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால், சுமார் 1 கி.மீ இருக்கும். தாவா சொத்திலும் எனக்கு வீடு உள்ளது.

6) தாவா சொத்திலுள்ள வீட்டில் நான் வசிக்கவில்லை என்றால், சரிதான். ஆனால், அவ்வப்போது விவசாயப்பணிகளுக்காக தங்கிக்கொள்வேன். நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்தில் அவ்வாறு எவ்வித கூரை வீடும் இல்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. ச.எண்.209/4ற்குரிய அடங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தில் வீடு உள்ளது என்பதை காண்பிக்க நான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

7) தாவா 2வது அயிட்ட சொத்தை 1வது அயிட்ட சொத்திற்கு செல்லும் பொதுப்பாதை என நான் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி பாதையில் நாங்கள் மட்டும்

தான் சென்று வருகிறோம். அவ்வாறெனில் தாவா சொத்தில் பொதுப்பாதை என எதுவும் இல்லை என்றால், சரிதான். ச.எண்.209/3 ல் 12 அடி அகலம், 142 மீட்டர் நீளம் கொண்ட பொதுப்பாதை உள்ளது என நான் சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதையேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

8) பிரதிவாதிகளும், நாங்களும் உறவினர்கள் என நான் சொல்லியுள்ள நிலையில், என்ன உறவுமுறை என நான் என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால், நாங்கள் பங்காளிகள் உறவுமுறை. தாவா 2 வது அயிட்ட பாதை நெடுங்காலமாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு செல்வதற்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு நெடுங்காலமாக பாதை உள்ளதை காண்பிக்க ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ச.எண்.209/4 ல் எனக்கு வீடே இல்லாத நிலையில், பாதை உள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.